# மூதூரில் இரண்டு பெண்கள் வெட்டிக்கொலை!

திருகோணமலை, மார்ச் 14

திருகோணமலை,மூதூர்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாஹா நகர் பகுதியில் இன்று அதிகாலை 4.30 மணியளவில் இரண்டு பெண்கள் வெட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மூதூர், தாஹா நகர் பகுதியில் ஸ்ரீதரன் தர்ஷினி என்பவருடைய வீட்டிலேயே இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஸ்ரீதரன் ராஜேஸ்வரி (வயது 68) மற்றும் அவரது உறவினரான சக்திவேல் ராஜகுமாரி (வயது 74) ஆகியோரே வெட்டுக் காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் 2►



மாலைக்கதிர்
Maalaikkathir

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 30 வெள்ளிக்கிழமை 14.03.2025 கதிர் 153

# நாமலை ஜனாதிபதியாக்கும் வேலைத்திட்டம் ஆரம்பமாம்

## இப்படி மொட்டுக் கட்சி கூறுகின்றது



கொழும்பு, மார்ச் 14

போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ஷவின் மகனான நாமல் ராஜபக்ஷவை நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக்குவதற்குரிய வேலைத்திட்டம் உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஊடாக ஆரம்பமாகும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"உள்ளூராட்சிசபைத்தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தயாராகி வருகின்றது.

இந்த நாட்டின் அடுத்த தலைவர் நாமல் ராஜபக்ஷ என்ற விடயத்தில் மாற்றுக் கருத்து கிடையாது. போரை முடித்து, நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்திய தலைவர்தான் மஹிந்த ராஜபக்ஷ. எனவே, அவரது முகத்தில் 2►

# புதிய ஜனாதிபதி ஆணைக்குழு நியமனம்

## அமைச்சர் பிமல் அறிவிப்பு



கொழும்பு, மார்ச் 14

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையைச் சட்டமா அதிபருக்கு அனுப்பி, தேவையான ஆலோசனைகளைப் பெறவும் ஜனாதிபதி குழுவை நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபை முதல்வர் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இன்று பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்பித்ததன் பின்னர், இந்த விவகாரம் தொடர்பாக பொருத்தமான நேரத்தில் நாடாளுமன்றத்தில் இரண்டு நாள் விவாதம் நடத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், இந்த அறிக்கை மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டு எதிர்காலத்தில் பொதுமக்களுக்கு வெளியிடப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# வவுனியா மாவட்டத்தில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தியது தமிழரசு



வவுனியா, மார்ச் 14


வவுனியா மாநகர சபை உள்ளிட்ட நான்கு சபைகளிலும் போட்டியிட இலங்கைத் தமிழரசுக்கட்சி இன்று வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியது.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகள் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை கட்டுப்பணம் செலுத்த முடியும்.

அதற்கமைவாக, வவுனியா மாவட்டத்தின் வவுனியா மாநகர சபை, வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கல செட்டிகுளம் பிரதேச சபை ஆகிய நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வீட்டுச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது. 2►

## யாழ். மாவட்டத்தில் போட்டியிட

# கட்டுப்பணம் செலுத்திய தமிழ் மக்கள் கூட்டணி



யாழ்ப்பாணம், மார்ச் 14

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்குத் தமிழ் மக்கள் கூட்டணி இன்று மதியம் யாழ். தேர்தல்கள் அலுவலகத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 17 சபைகளில் 16 சபைகளுக்குத் 2►

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# முன்னாள் மேயரை அரசியலுக்கு வருமாறு கோரி நுவரெலியாவில் ஆதரவு போராட்டம்

நுவரெலியா, மார்ச் 14

அரசியலில்இருந்துதற்போதுஒதுங்கியுள்ள நுவரெலியா மாநகர சபையின் முன்னாள் மேயர மஹிந்த தொடம்ப கமகே, மீண்டும் அரசியலுக்கு வந்து நுவரெலியா மாநர சபைக்குப் போட்டியிட வேண்டும் எனக் கோரி இன்று ஆதரவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நுவரெலியா மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் வாக்காளர்களாலேயே குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மஹிந்த தொடம்ப கமகேவுக்கு உரிய நுவரெலியா பகுதியிலுள்ள சுற்றுலா ஹோட்டலுக்கு முன்னாள் திரண்ட



சர்வமதத் தலைவர்கள், ஆதரவாளர்கள், அவர் மீண்டும் அரசியலுக்கு வரவேண்டும் எனக் கோரினார்கள்.

மஹிந்த தொடம்ப கமகே நுவரெலியா மேயராக செயற்பட்ட போது பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுத்துள்ளார் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு மத்தியில் வந்த முன்னாள் மேயர் தொடம்ப கமகே, தனக்கு மீண்டும் அரசியலில் ஈடுபடும் எண்ணம் இல்லை எனவும், எனினும், வாக்காளர்களின் கோரிக்கை தொடர்பில் பரிசீலிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார்.

## மூதூரில் இரண்டு .....

தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்த ஸ்ரீதரன் ராஜேஸ்வரி என்பவரின் 15 வயது மகள் வெட்டுக் காயங்களுடன் மூதூர் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை எனவும், தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

## கட்டுப்பணம்......

தமிழ் மக்கள் கூட்டணி சார்பாக வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். வல்வெட்டித்துறை நகர சபையில் சுயேச்சையாகக் களமிறங்கும் அணிக்குத் தமிழ் மக்கள் கூட்டணி ஆதரவு வழங்குகின்றது என்று கட்சியின் உறுப்பினர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

## நாமலை.....

அடுத்த தலைவர் நாமல்தான்.

எனவே, நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்குவதற்குரிய வேலைத்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கை இந்தத் தேர்தல் ஊடாக ஆரம்பமாகும்.

இந்த நாட்டுக்கு வேலை செய்த அணி ராஜபக்ஷ அணிதான் என்பதை இந்த நாட்டில் சோறு சாப்பிடும் மக்கள் இன்று உணர்ந்துள்ளனர். தற்போதைய ஆட்சியின் கீழ் எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களும் இன்னும் முன்னெடுக்கப்படவில்லை." - என்றார்.

## வவுனியா மாவட்டத்தில் ......

அதற்கான கட்டுப்பணத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் உள்ளடங்கிய கட்சி முக்கியஸ்தர்கள் செலுத்தினர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases

- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments

- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு யாழில் நடைபவனி

யாழ்ப்பாணம், மார்ச் 14

உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் மாபெரும் விழிப்புணர்வு நடைபவனி முன்னெடுக்கப்பட்டது. இதன்போது விழிப்புணர்வு









துண்டுப் பிரசுரங்களும் விநியோகம் செய்யப்பட்டன.

யாழ்ப்பாணம் சிவன் கோயிலுக்கு முன்பாக ஆரம்பமான நடைபவனி காங்கேசன்துறை வீதியூடாகச் சென்று, பின்னர் வைத்தியசாலை வீதியூடாக சென்று எஸ்.ரி.எஸ் வைத்தியசாலையை அடைந்தது. பின்னர் வைத்தியசாலையில் விழிப்புணர்வுச் செயலமர்வும் நடைபெற்றது.

குளுக்கோமா நோய் என்பது கண்ணில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். இந்த நோயை ஆரம்பத்தில் இனங்காண்டு சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதன் மூலம் நோயில் இருந்து குணமடைய முடியும். எனவே, இந்த நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இந்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

லயன்ஸ்கழகம்மற்றும்எஸ்.ரி.எஸ்வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பாடசாலை மாணவர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# தேசிய மக்கள் சக்தி யாழில் கட்டுப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச் 14

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காகத் தேசிய மக்கள் சக்தி யாழ்ப்பாணத்தில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் இந்தக் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்குமான கட்டுப்பணத்தைத் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரன் செலுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சண்முகநாதன் ஸ்ரீபவனந்தராஜா உள்ளிட்ட கட்சி உறுப்பினர்கள் இதன்போது வருகை தந்திருந்தனர்.







# நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை!

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை சபைத் தலைவர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க இன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அத்துடன் பட்டலந்த அறிக்கையை கையாள்வது குறித்து ஜனாதிபதி தலைமையிலான அமைச்சரவை, கொள்கை தீர்மானம் எடுத்துள்ளதாகவும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன்படி, இந்த அறிக்கையை சட்டமா அதிபருக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளுக்கான வழிமுறைகளை முன்மொழிய ஒரு விசேட குழுவை நியமிக்க ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அறிக்கை தொடர்பாக இரண்டு நாள் விவாதம் நடத்தப்படும் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கடுகண்ணாவ ரயில் குறுக்கு வீதிக்கு பூட்டு!



*பிரதான ரயில் மார்க்கத்தின் கடுகண்ணாவ மற்றும் பிலிமதலாவ ரயில்நிலையங்களுக்கு இடையில் அமைந்துள்ள கடுகண்ணாவ ரயில் குறுக்கு வீதியில் அவசர பராமரிப்பு பணி மேற்கொள்ளப்படுகிறது.*

*இதன் காரணமாக நாளை காலை 10.00 மணி முதல் நாளை மறுநாள் காலை 6.00 மணி வரை குறித்த வீதியானது வாகனப் போக்குவரத்துக்காக முற்றிலுமாக மூடப்படும்என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*எனவே போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கவும், சிரமத்தைக் குறைக்கவும் சாரதிகள் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*



# சஜித் கட்சிக்கு கால அவகாசம் வழங்கியுள்ள ஐ.தே.க!

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்காக கூட்டாக இணைந்து போட்டியிடுவது குறித்து தனது முடிவை தெரிவிக்க ஐக்கிய தேசியக் கட்சி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கு மார்ச் மாதம் 20ஆம் திகதி வரையில் கால அவகாசம் வழங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினர்களிடையே இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியானது, ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள்ளும் கூட்டணியை விரிவுபடுத்த விரும்பினால், காலக்கெடுவிற்கு முன்பே அந்த அறிவிப்பை வெளியிடலாம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# அநுராதபுரத்தில் பாலியல் வன்கொடுமைக்குள்ளான பெண் வைத்தியர் விவகாரம்- கைதான நபர் வீட்டில் கைப்பற்றப்பட்ட கைக்குண்டு!

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமைசெய்த சம்பவம்தொடர்பில்கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் வீட்டிலிருந்து கைக்குண்டு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண் வைத்தியரின் தொலைந்து போன கையடக்க தொலைபேசியை கண்டறியும் நோக்கில், சந்தேக நபர் வசித்த கல்னேவ வீட்டில் இன்று காலை கல்னேவ பொலிஸாரும், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து நடாத்திய தேடுதல் நடவடிக்கையின் போதே குறித்த கைக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

# அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு பதில் பணிப்பாளர் நியமனம்!

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளராக வைத்தியர் எம்.எம்.ஐ.யு கருணாரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர்தற்போது பொலன்னறுவை வைத்தியசாலையின் பணிப்பாளராக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா இன்று ஆரம்பம்!



கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று ஆரம்பமாகி, நாளை காலை திருநாள் திருப்பலியுடன் முடிவடையவுள்ளது.

இந்த விழா தொடர்பில்யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தைஜெபரட்ணம், யாழ் மறைமாவட்ட ஆயர்இல்லத்தில் ஊடகங்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் நடைபெறவுள்ளது.

வழமைபோல இந்த ஆண்டும் இந்திய மற்றும் இலங்கை பக்தர்கள் ஆயிரக்கணக்கில் பங்கேற்கின்றனர். மொத்தம் 8,000 பக்தர்களும், சிவகங்கை மறைமாவட்ட ஆயருடன் இணைந்து 100 குருக்களும் இந்த யாத்திரையில் கலந்துகொள்ளவுள்ளனர்.

நெடுந்தீவு பிரதேச சபை, யாழ் மாவட்ட செயலகம் மற்றும் கடற்படை இணைந்து இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளன என்று தெரிவித்தார்.

# இரவு நேர சேவைகளிலிருந்து விலகும் பெண் கிராம உத்தியோகத்தர்கள்!




அனைத்து பெண் கிராம உத்தியோகத்தர்களும் இன்று முதல் இரவு நேர சேவைகளிலிருந்து விலகுவதாக இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

கிராம உத்தியோகத்தர்களும் பல்வேறு சமயங்களில் விபத்துக்களை எதிர்நோக்க நேரிட்டுள்ள நிலையில் தமக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு கோரி இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் கொழும்பு மாவட்டத் தலைவர் சாமலி வத்சலா குலதுங்க தெரிவிக்கையில், பாதுகாப்பற்ற மற்றும் மக்கள் வசிக்காத பகுதிகளில் இயங்கும் அலுவலகங்களை மூடுவதற்கும், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட இடத்தில் இருந்து அலுவலகப் பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

கிராம உத்தியோகத்தர்களில் அறுபது சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்களாக உள்ளனர் என்று கிராம உத்தியோகத்தர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்தார்.

பெரும்பாலான கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் தனிமைப்படுத்தப்பட்ட அல்லது மக்கள் நடமாட்டம்இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ளதால் பெண் உத்தியோகத்தர்களின் பாதுகாப்புக்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு நெவில் விஜேரத்ன கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ், இரவு நேர முறைமைகளில் பணியாற்றும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# முட்டை மாஃபியா



முட்டையிலிருந்து ஒரு பறவைக் குஞ்சு வெளிவந்திருக்கிறது. வந்த உடனே அது செய்யும் முதல் வேலை, கூட்டிலிருக்கும் மற்ற முட்டைகளைக் கீழே தள்ளி உடைப்பதுதான்.

உணவைச் சேகரித்துக்கொண்டு திரும்பி வரும் பறவைப் பெற்றோர், இது ஏதோ தற்செயல் என்று நினைத்துக்கொண்டு அந்தக் குஞ்சுக்கு உணவூட்டுவர். அதுவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும்.

நன்றாக உணவு உண்ணும் குஞ்சு, பெற்றோரைவிடப் பெரிதாக வளர்ந்து நிற்கும்போதுதான் தெரியும் அது அந்தப் பறவையினமே அல்ல. வேறு எதோ ஊடுருவி அது. தன் குழந்தை என்று நினைத்து வேறு எதையோ அந்தப் பறவைகள் இத்தனை காலம் வளர்த்திருக்கின்றன.

கண்ணீர் மல்கச் செய்யும் தமிழ் சென்டிமெண்ட் திரைப்படத்தின் முக்கியமான கதைத்திருப்பத்தைப் போல இருக்கும் இது, இன்றுவரை விஞ்ஞானிகளைக் குழப்பிவரும் ஒருவகை ஒட்டுண்ணிப் பண்பு. இதன் பெயர் குஞ்சு ஒட்டுண்ணித்தனம் (Brood Parasitism). அதாவது, தன் குழந்தையைப் வளர்த்தெடுக்கும் பொறுப்பை வேறு ஓர் இனத்திடம் விட்டுவிடுவது, அந்தப் பொறுப்பிலிருந்து தப்பித்துக்கொள்வது.

'காக்கையின் கூட்டில் தன் முட்டைகளைக் குயில் இட்டுவிடும்' என்று படித்திருப்போம். குயிலும் இந்தப் பண்பைக் கொண்டதுதான். இதில், குயில் என்பது ஒட்டுண்ணி (Parasite), காக்கைதான் ஓம்புயிரி (Host). மேலே குறிப்பிட்ட உதாரணம் ஆசியக் குயில் என்ற பறவையின் இனப்பெருக்கப் பண்பு. அது கிட்டத்தட்ட 100 பறவை இனங்களின் கூடுகளில் முட்டையிடும் இயல்பு உடையது. பெரும்பாலும் குயில் குஞ்சுகள்தாம் முட்டையிலிருந்து முதலில் வெளிவரும். வந்த உடனே அங்கு உள்ள மற்ற முட்டைகளை உடைத்துவிடும். தன் பிழைப்பை உறுதிசெய்துகொள்ளும்.

ஒன்றல்ல இரண்டல்ல, 100 பறவை இனங்களுக்கு இந்தப் பண்பு உண்டு. இந்த 100 இனங்களும் மொத்தமாக 950 பறவை இனங்களை ஏமாற்றி அவற்றின் கூட்டில் முட்டையை இடுகின்றன. இந்தப் பண்பு தனித்தனியாக ஏழு முறை பரிணாமக் காலக்கோட்டில் தோன்றியிருக்கிறது! இந்தப் பண்பைக் கொண்ட மீன்களும் பூச்சியினங்களும்கூட உண்டு.

இதில் என்ன நடக்கிறது என்பதைப் படிப்படியாகப் பார்க்கலாம். ஒட்டுண்ணியின் இனப்பெருக்கக் காலமும் ஓம்புயிரியின் இனப்பெருக்கக் காலமும் கிட்டத்தட்ட ஒன்றாகவே இருக்கும். சில நேரத்தில் இரண்டு இனங்களின் முட்டைகளும்கூட ஒரே மாதிரி காட்சியளிக்கும். முட்டையிட்ட பின்பு ஓம்புயிரிகள் கூட்டை விட்டு வெளியேறும்போது, சரியாக அந்த நேரத்தில் ஒட்டுண்ணி போய் அங்கு முட்டையிடும். அடுத்ததுதான் சுவாரஸ்யமான கட்டம். போன பறவை திரும்பி வந்துவிடுகிறது. கூட்டில் ஏதோ ஒரு மாற்றம் நிகழ்ந்திருக்கிறது என்பதை அது கண்டுபிடிக்கிறதா இல்லையா என்பதைப் பொறுத்து சில விஷயங்கள் நடக்கும். ஒருவேளை அது கண்டுபிடித்துவிட்டால், கூட்டில் இருக்கும் முட்டைகளில் எது தன் முட்டை என்பதைச் சரியாகப் பிரித்தெடுத்து, வேற்று முட்டையை மட்டும் தனியாக உடைக்க வேண்டும். அடையாளம் தெரியாமலோ தவறுதலாகவோ தன் முட்டையை உடைத்துவிட்டால் அது பெரிய இழப்பாகிவிடும். அயல் முட்டையைக் கண்டுபிடிக்க முடியாத சில பறவைகள், குழப்பம் தாங்காமல் அந்தக் கூட்டையே கைவிட்டுவிட்டுப் பறந்துவிடுகின்றன. அந்த இனப்பெருக்கக் காலம் முழுக்கச் செலவிட்ட நேரமும் ஆற்றலும் வீண்!

ஒருவேளை சரியான முட்டைகளைக் கண்டுபிடித்து ஊடுருவிகளை வெளியேற்றிவிட்டால், அந்தப் பறவை தன் முட்டைகளை மட்டும் அடைகாத்தால் போதுமானது. சில நேரம் அதுவும் வெற்றிகரமாக நடக்கும்.

சில பறவைகளுக்கு மாற்றம் நடந்திருப்பதே தெரியாது. அப்போது அவை வேற்று முட்டைகளையும் சேர்த்து அடைகாக்கின்றன.

வேற்று முட்டைகள் அடைகாக்கப்பட்டு வெற்றிகரமாகக் குஞ்சு பொரிந்த பிறகு, அவை மற்ற குஞ்சுகளோடு உணவுக்குப் போட்டி போடுகின்றன. சில ஒட்டுண்ணிக் குஞ்சுகள் முதலில் வெளிவந்து மற்ற முட்டைகளைத் தள்ளிவிட்டுவிட்டு பெற்றோர் கொண்டுவரும் எல்லா உணவையும் தனியாகத் தின்று கொழுக்கின்றன. சிலநேரம் ஒட்டுண்ணிக் குஞ்சுகளும் ஓம்புயிரிகளும் ஒன்றாக வளர்கின்றன. அடுத்தடுத்த இனப்பெருக்க காலங்களில் இதுபோன்ற ஒட்டுண்ணிகளிடமிருந்து தப்பிக்கும் வித்தையைக் கற்றுக்கொள்ள ஓம்புயிரிகள் முயற்சி செய்கின்றன. அவற்றை ஏமாற்றும் வித்தைகளை ஒட்டுண்ணிகளும் கற்றுக்கொள்கின்றன, சுழற்சி தொடர்கிறது.

சில ஓம்புயிரிகள் வேற்று முட்டைகளை வெற்றிகரமாக அடையாளம் கண்டு அந்த முட்டைகளை மட்டும் தேடிப்பிடித்துப் போட்டு உடைத்துவிடுகின்றன.

அப்படியானால் அந்தச் சூழலில் ஒட்டுண்ணிகள் தோற்றுவிடுகின்றன, இல்லையா?

## அது அத்தனை சுலபமல்ல.

ஒட்டுண்ணிகளுக்கும் ஓம்புயிரிகளுக்கும் கண்ணுக்குத் தெரியாத ஒரு பந்தயம் நடந்துகொண்டேயிருக்கும். ஓம்புயிரிகள் வெற்றிகரமாக முட்டைகளை அடையாளம் கண்டால், ஒட்டுண்ணிகள் முட்டைகளின் அளவையும் நிறத்தையும் மாற்றிக்கொண்டு ஒன்றுபோலவே காட்சிதர முயற்சி செய்யும். ஓம்புயிரிகள் முட்டைகளை உடைத்தால், ஒட்டுண்ணிகள் தங்கள் முட்டை ஓட்டின் வலுவை அதிகப்படுத்தும். சராசரியான ரீட் வார்ப்ளர் பறவையின் முட்டையைவிட ஒரு குயிலின் முட்டை ஓடு 23 மைக்ரோமீட்டர் கூடுதல் தடிமன் இருக்குமாம்! முட்டையை வலுப்படுத்தும் முயற்சி இது. ஒருவேளை இதில் எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்து ஒட்டுண்ணிகளின் முட்டை ஒருவழியாக உடைக்கப்பட்டுவிட்டால், அவை அடுத்த கட்ட சண்டைக்குத் தயாராகும்.

## அதுதான் மாஃபியா பண்பு.

இந்தக் கருத்தாக்கத்துக்கு மாஃபியா கருதுகோள் (Mafia Hypothesis) என்று பெயர். அதாவது, ஓர் ஓம்புயிரி வேற்று முட்டையைக் கண்டுபிடித்து உடைத்துவிட்டால், அந்த முட்டையைப் போட்ட ஒட்டுண்ணி அதைத் தெரிந்துகொண்டு அந்த ஓம்புயிரியின் முட்டைகளை எல்லாம் மொத்தமாக அழித்துவிடும்! டீசழறப ஈநயனநன உழறடிசைன என்று ஒரு பறவை — இது 221 வகையான பறவை இனங்களின் கூட்டில் முட்டையிடும் பண்பு கொண்டது. இதில் ஏதாவது ஒரு பறவை முட்டையைக் கண்டுபிடித்து உடைத்துவிட்டால் போதும், அடுத்தநாளே அந்தக் கூடு சிதைக்கப்பட்டு, எல்லா முட்டைகளும் உடைக்கப்படும்!

இந்த நடவடிக்கை 'மாஃபியா' என்ற பெயரில் ஏன் குறிப்பிடப்படுகிறது என்று இப்போது புரிந்திருக்கும். 'அவங்க சொல்றத செஞ்சிடுங்க, இல்லைன்னா வீட்டுக்கு வந்து கலாட்டா பண்ணப் போறாங்க, அவங்க எதுக்கும் துணிஞ்சவங்க. நம்ம குழந்தைங்களோட எதிர்காலம் முக்கியம்' என்பது போன்ற வசனங்களுக்குப் பொருத்தமான காட்சி இது.

இதில் இன்னொரு சுவாரஸ்யம் என்னவென்றால், ஒரு முறை கூடு அழிக்கப்பட்ட பறவைகள் அதே இனப்பெருக்க காலகட்டத்துக்குள் திரும்ப கஷ்டப்பட்டு கூடு கட்டினாலும், டீசழறப ஈநயனநன உழறடிசைன மீண்டும் அங்கு போய் எல்லாவற்றையும் அழிக்கும்! வேற்று முட்டைகளை அழித்தால் தண்டனை கொடுக்கப்படும் என்று அழுத்தமாக உணரும் பறவைகள், அதற்கு அடுத்த காலகட்டத்தில், கூட்டுக்குள் வேற்று முட்டை தென்பட்டாலும் கண்டும் காணாததுபோல் அதையும் சேர்த்து அடைகாக்கின்றன. இந்தப் பண்பு 2014-ல் உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு குறிப்பிட்ட பறவை, இந்த இனத்தின் கூட்டில்தான் முட்டையிடும் என்பது போன்ற தனித்துவங்களும் உண்டு. இதுபோன்ற ஒட்டுண்ணிகள் புநவெநள என்று அழைக்கப்படுகின்றன. ஓம்புயிரிகளின் இனப்பெருக்கக் காலம், முட்டை அளவு, நிறம், வடிவம் போன்றவற்றோடு இவை கச்சிதமாகப் பொருந்தும் அளவுக்குப் பரிணாம வளர்ச்சி அடைகின்றன. முட்டைகள் ஒன்றுபோலவே தோற்றமளிப்பது நுபப அஅைஉசல என்று அழைக்கப்படுகிறது. இதில் சுவாரஸ்யம் என்னவென்றால், ஓம்புயிரிகள் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு கூட்டைக் கண்காணிக்கக்கூடியவை என்றால் மட்டுமே இந்த முட்டை மிமிக்ரி எல்லாம், கூட்டைக் கண்காணிக்காத ஓம்புயிரிகளின் முட்டையில் எல்லாவித முட்டைகளும் வந்து சேரும்!

ஒட்டுண்ணி இருப்பதால் நன்மை அடையும் மிகச் சில ஓம்புயிரிகளும் உண்டு. புசநயவ ளுிழவவநன உரஉமழழ என்ற இனம், மற்ற பறவைகளின் கூட்டில் முட்டையிடுகிறது. இந்தக் குயில் குஞ்சுகள், மோசமாக நாற்றமடிக்கிற ஒரு கறுப்பான திரவத்தை வெளியிடுகின்றன. நாற்றம் இருப்பதால் வேட்டை மிருகங்கள் அந்தக் கூட்டைத் தாக்குவதில்லை. குயில் குஞ்சுகளோடு ஓம்புயிரிகளின் குஞ்சுகளும் பாதுகாக்கப்படுகின்றன! இந்த வகைக் குயில் முட்டைகள் இருக்கும் கூடுகள்; 70% கூடுதலாக வெற்றிகரமாக இயங்குகின்றன என்பதை 2019-ல் நடந்த ஓர் ஆய்வில் கண்டுபிடித்திருக்கிறார்கள்!இதுபோன்ற ஒட்டுண்ணிப் பண்பு ஏன் உருவானது என்பதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அவற்றில் எதுவும் முழுமையாக நிரூபிக்கப்படவில்லை. ஆனாலும் குஞ்சுகளுக்காக நேரம் செலவிடாமலேயே அடுத்த தலைமுறையை வெற்றிகரமாக வளர்த்தெடுக்க முடியும் என்பது பெரிய பயன்தான். இதில் ஓம்புயிரிகளுக்கே பாதிப்பு அதிகம் என்பதால் அவைதான் அடுத்தடுத்த பரிணாம வளர்ச்சிகளில் இதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கின்றன. இது ஒரு பந்தயமாகவே நடந்துகொண்டிருக்கிறது.

எல்லாம் சரி, தாய்ப்பாசம் இல்லாமல் இப்படி நடந்துகொள்ளும் ஒட்டுண்ணிப் பறவை ஒரு நல்ல அம்மாவா? இந்தக் கேள்வி அபத்தமானது என்றாலும், பரிணாம வளர்ச்சியை மட்டும் வைத்துப் பார்த்தால், ஆமாம் என்றே சொல்லலாம். பெரிதாக முயற்சிகள் எடுக்காமலேயே குஞ்சுகளை வளர்த்துவிடுகிறது என்பதால் எப்படிப் பார்த்தாலும் ஒட்டுண்ணிக்கு லாபம்தான். குழந்தை வளர்க்கும் பொறுப்பு இல்லை என்பதால் அடுத்தடுத்து இனப்பெருக்கத்தில் ஈடுபடவும் உணவு சேகரிக்கவும் அதற்கு நிறைய ஆற்றலும் நேரமும் மிஞ்சுகிறது. பரிணாமத்தைப் பொருத்தவரை குழந்தைக்கும் தாய்க்குமான பிணைப்பு என்பது, அந்தக் குழந்தையை வளர்த்தெடுப்பதற்காகவே உருவாகியிருக்கிறது. ஆகவே அந்தப் பிணைப்பு இல்லாமலேயே குஞ்சுகளை வேறொருவர் பொறுப்பில்விட்டு வளர்க்கும் ஒட்டுண்ணி பரிணாம லாட்டரியில் ஜாக்பாட் அடித்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

பெண் விலங்குகளுக்காக ஆண் விலங்குகள் சண்டையிட்டுக்கொள்வதை நாம் அறிந்திருப்போம். ஆணாகவும் பெண்ணாகவும் ஒரே நேரத்தில் இருபால் பண்பு கொண்ட உயிரினங்கள் எப்படி இனப்பெருக்கம் செய்கின்றன? அவை இப்படிச் சண்டை போடுமா?

**முல்லை ஓய்வு நகர்**
**Mullai Rest City**

**எழுதுமட்டுவாழ் நகரில்**
**2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!**

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்

SUPERMARKET

4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd

**தொடர்புகளுக்கு: 0777 43 5557**




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.03.2025 இல் வெளியிடப்பெற்றது.